بسم الله الرحمن الرحيم

# பல்லின சமூகங்களுக்கிடையிலான நட்புறவும் நபிகள் பெருமானாரின் வழிகாட்டல்களும்

.M.Abdul Hafeel (M.A.Public Administration)

**அறிமுகம் :** இந்த உலகத்தில் அரசியல், ஆன்மிகம், சமூகவியல் ஆகிய துறைகளில் ஒரு சேர மகத்தான வெற்றிபெற்று, அழுத்தமான தாக்கத்தை ஏற்படுத்தி, அளப்பெரிய செல்வாக்குடன் வாழ்ந்து, அழியாப் புகழ் பெற்றவர்களில் இறுதித் தூதர் முஹம்மது நபி (ﷺ) அவர்கள் முதன்மையானவர்கள். பல்லின, பல மொழிகள் பேசுகின்ற மக்கள் குழுமங்கள் வாழ்ந்த பாலை நிலப் பிரதேசத்தில் தோன்றி, அனைவரையும் மனிதன் என்ற ஒரே நோக்கில் சமனாகப் பார்த்த காரணத்தால், நபி (ﷺ)அவர்களுக்கு உலக மக்களிடம் ஓர் உன்னத இடமுள்ளது. கிறித்தவ மதத்தில் ஆழ்ந்த நம்பிக்கையுள்ள Michael H. Hart என்பவர், மனித குலத்தில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியவர்களை வரிசைப்படுத்தும் போது, நபி(ﷺ)அவர்களுக்கு முதல் இடத்தை அளித்துள்ளார். **“சமயம் உலகியல் ஆகிய இரு நிலைகளிலும் ஒரு சேர மகத்தான வெற்றி பெற்றவர், வரலாற்றில் அவர் ஒருவரே தாம்”** என்று வர்ணித்து, நபி(ﷺ)அவர்களை முதல் சாதனையாளராகத் தேர்வு செய்ததற்கான காரணத்தை அவர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

*"My choice of Muhammad to lead the best of the world’s most influential persons may surprise some readers and may be questioned by others, but he was the only man in history who was supremely successful on both the religious and secular levels.”(1)*

நபி (ﷺ)அவர்களின் போதனைகள் பிரதானமாக மறுமை விமோசனத்தை மையப்படுத்தி இருந்தது. ஆனால், உலகம் சந்திக்கும் அனைத்துப் பிரச்சினைக்கும் அவர்கள் தீர்க்கமான தீர்வுகளை முன்வைத்தார்கள்.

“நபி (ﷺ)அவர்களின் வாழ்க்கை வரலாறு என்பது மனித சமுதாயத்திற்காக அவர்கள் கொண்டு வந்த இறைத்தூதைக் குறிக்கும் சொல்லாகும். தான் கொண்டு வந்த இறைத்தூதை தங்களின் சொல், செயல், வழிகாட்டல், ஒழுக்க மாண்புகள் ஆகியவற்றின் மூலம் மனித குலத்திற்கு எடுத்துரைத்தார்கள். அந்த இறைத் தூதுத்துவத்தால் மனித வாழ்வின் அளவுகோல்களை முற்றிலுமாக மாற்றினார்கள். தீமைகளைக் களைந்து, நன்மைகளை போதித்தார்கள். இருளைவிட்டு மக்களை அகற்றி ஒளியை நோக்கி அழைத்து வந்தார்கள். படைப்பினங்களை வணங்குவதிலிருந்து மனிதனை முழுமையாக விடுவித்து, படைப்பாளனாகிய ஒரே இறைவனை வணங்கும்படி செய்தார்கள். சுருங்கக்கூறின், இவ்வுலகில் நெறி தவறி வாழ்ந்த மனிதனின் வாழ்க்கைப் பாதையை மாற்றி, செம்மையான, அழகிய பாதையில் அவனை வாழச்செய்தார்கள்.”(2) என்று அறிஞர் ஸஃபிய்யுர் ரஹ்மான் அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்.

உலகில் யாராலும் தீர்க்க முடியாது என்று கருதப்பட்ட சாதியம், இனமாச்சரியம், நிறவெறி, மொழிவெறி, ஏற்றத்தாழ்வு, ஆண்டான்-அடிமை நிலை அனைத்தையும் ஓர் இறைக் கோட்பாட்டுப் போதனையூடாக உலகிலேயே குறுகிய காலத்தில் தீர்த்துக்காட்டினார்கள். அதனால், உலகிற்கு மகத்தான சட்டம் வழங்கியவர்களின் பெயர்ப் பட்டியலில் அவர்களது பெயரும் அமெரிக்காவின் லிங்கன் பல்கலைக்கழகத்தில் பொறிக்கப்பட்டுள்ளது. “இஸ்லாம் தனித்துவமாக விளங்குவதற்குக் காரணம் அது மட்டுமே தன்னை அண்டியவர்களுக்கு இந்த மண்ணிலேயே நிறைவேற்றத் தக்க ஒரு சமூகத் திட்டத்தை முன்வைக்கிறது. இஸ்லாம் மறுமையைப் பற்றியும் இறுதித் தீர்ப்புப் பற்றியும் பேசினாலும் அது இந்த உலகத்திலேயே சமத்துவமும் நீதியும் நிறைந்த ஒரு சமூகத்தை நிர்மாணிக்கும் திட்டத்தை வைத்து இயங்கியது, இயங்குகிறது. வருணத்தையும் சாதியையும் தீண்டாமையையும் ஒப்பீட்டளவில் வென்ற ஒரே மதமாக இஸ்லாம் மட்டுமே அமைந்தது. எங்களை இஸ்லாம் ஈர்த்ததற்கான முதற் காரணம் இதுவே”(3) “...இறைத் தூதர் முஹம்மதின் வாழ்வை அறிய அறிய அவரின் மானுடத் தன்மையில் நான் என் உள்ளம் இழந்தேன். அவரது ஆளுமையில் கரைந்து போனேன்” (4) என அ.மார்க்ஸ் சிலாகிக்கின்றார்.

ஆன்மிகவாதிகளுக்கு மட்டுமல்லாது,அதிகாரத்தில் அமர்பவர்களுக்கும் அவரது வாழ்வில் செழுமையான முன்மாதிரிகள் உள்ளன என்று அந்நிய மத அறிஞர்கள் புகழாரம் சூட்டும் அளவு அவரது சிந்தனைத் தாக்கம் அனைத்துத் துறைகளையும் தழுவி, இன்றுவரை வியாபித்துள்ளது.

...............................................

(1)Michael H. Hart (1998) The 100 most influential persons in history. (P. 33)
(2) அர்ரஹீகுல் மக்தூம் ப:6
(3) ஆ.மார்கஸ் (2004) நான் புரிந்து கொண்ட நபிகள் ப:7
(4) ஆ.மார்கஸ் (2004) நான் புரிந்து கொண்ட நபிகள் ப:7

"அறிவுரை கூறுவோர் அவர்போல் நடக்கவும்: இவர்போல் நடக்கவும் என்று கூறுவதையே காண்கின்றோம். என்னைப்போல் நட என்று சொன்ன பெருமைக்குரியவர் பெருமானார்''[1] என Dr.சிலம்பொலி குறிப்பிடுகின்றார். இஸ்லாம் அதிகாரத்தில் இருக்கும் பொழுதும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் சூழலிலும் எப்படி வாழவேண்டும் என்பதை நபி(ﷺ)அவர்களது வாழ்வியல் நடைமுறைகள் தெளிவுபடுத்துகின்றன.

ஆன்மிகம் – அரசியல் என்று இரு மகத்தான பொறுப்பில் தலைமை ஏற்றிருந்த இறுதித் தூதர் முஹம்மது நபி (ﷺ)அவர்கள் பற்றிய சிறு அறிமுகத்தை இக்கட்டுரையில் வழங்கியுள்ளதோடு, அவர்கள் பிற இன, மத மக்களுடன் எப்படி நட்புடன் நடந்துகொண்டார்கள்; சமூகங்களுக்கிடையில் நட்புறவை எவ்வாறு வளர்த்தார்கள்; அதற்கான அவர்களின் போதனைகளும் முன்மாதிரிகளும் எவ்வாறு அமைந்திருந்தன என்பன சான்றாதாரங்களுடன் மிகத் தெளிவாக வரலாற்றில் பதியப்படடுள்ளன என்பதையும் எடுத்துக்காட்டியுள்ளோம்.

நபி(ﷺ)அவர்கள், அல்லாஹ்வின் இறுதித் தூதராகவும் மனித குலத்தின் அருட்கொடையாகவும் அனுப்பப்பட்டார்கள். இன்றைய சவூதி அரேபியாவில் உள்ள மக்கா என்னும் நகரத்தில், அன்று அரபு மண்ணில் உயர்ந்த குலமாகக் கருதப்பட்ட குரைஷ் என்னும் குலத்தில் கி.பி. 571ஆம் ஆண்டு பிறந்தார்கள். "அகிலத்தின் அருட்கொடை, இறைத்தூதர்களின் தலைவர் மக்காவில் பனூ ஹாஷிம் பள்ளத்தாக்கில் ரபீவுல் அவ்வல் மாதம், கி.பி.571 பிறந்தார்கள். அது யானைச் சம்பவம் நடைபெற்ற ஆண்டு என அறிஞர் முஹம்மது ஸுலைமான் அவர்கள் குறிப்படுத்துகின்றார்."(2)

நபி(ﷺ)அவர்கள் தாயின் வயிற்றிலிருக்கும் போதே தந்தை அப்துல்லாஹ்வையும், தமது ஆறாம் வயதில் தாயார் ஆமினாவையும் இழந்து அநாதையாக நின்றார்கள். பின்னர் பாட்டனார் அப்துல் முத்தலிபின் அரவணைப்பிலும், அவர் மரணித்த பின் அபூதாலிபின் பராமரிப்பிலும் வளர்ந்தார்கள்.சிறு வயதில் யாருக்கும் பாரமாக இருக்கக் கூடாது என்பதால், ஆடு மேய்த்தார்கள். ஓரளவு விபரம் தெரிந்தவுடன் தமது பெரிய தந்தையுடன் சேர்ந்து, சிரியா நாட்டுக்குச் சென்று வியாபாரம் செய்தார்கள். இதனால், இளமையில் கல்வி கற்பதற்கான வாய்ப்பு அவர்களக்குக் கிடைக்கவில்லை. எழுதவோ, படிக்கவோ அவர்களுக்குத் தெரியாது. அல்குர்ஆன் அவர்களை உம்மி நபி[2] என அழைக்கிறது."பெருமானார் எழுதப்படிக்கத் தெரியாதவர் தான்; ஆனால், அவர் தான் பூமியின் புத்தகம்; உலகம் படிக்கும் ஒப்பற்ற புத்தகமாக பெருமானார் இருந்து வருகிறார்; அப்புத்தகம் நம் ஆயுள் முழுதும் படித்தாலும் படிக்க முடியாத புத்தகம்[3]

தமது 25 வது வயதில் வியாபாரத்தைக் கற்றுத் தேர்ந்தார்கள். மக்காவில் மிகப் பெரிய செல்வச் சீமாட்டியாகவும், பெரும் வணிகராகவும் திகழ்ந்த கதீஜா அம்மையார், நபி(ﷺ)அவர்களின் ஒழுக்கம், பண்பாடு, நேர்மை மற்றும் வியாபாரத் திறமை ஆகியவற்றைக் கேள்விப்பட்டு, அவர்களை மணந்து கொண்டார்கள். தமது நாற்பது வயது வரை அவர்கள் சாதாரண மனிதராகவும், ஒரு வியாபாரியாகவும் தான் இருந்தார்கள்.

நாற்பது வயதுக்குப் பின்னுள்ள நபிகள் நாயகத்தின் வாழ்க்கை இரு பெரும் அத்தியாயங்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

**மக்கா வாழ்க்கை:** நபி(ﷺ)அவர்கள் தமது நாற்பதாம் வயதில் அல்லாஹ்வின் இறுதித் தூதராக ஏற்றம்பெற்றார்கள்.

அகில உலகையும் படைத்தவன் ஒரே ஒருவன்தான்; அந்த ஒருவனைத் தவிர வேறு யாரையும், எதனையும் வணங்கக் கூடாது என்று தமக்கு அலல்ாஹ்விடமிருந்து வஹீ வருகிறது என்று பிரகடனப்படுத்தினார்கள். கொலை, கொள்ளை, வட்டி, சூதாட்டம், விபச்சாரம், போதைப் பொருட்கள், பொய், பித்தலாட்டம், மோசடி, ஏமாற்றுதல், தீண்டாமை கற்பித்தல்,இனமாச்சரியம் போன்ற எல்லாத் தீமைகளிலிருந்தும் மனிதர்கள் விலகி இருக்க வேண்டும் என்று வஹீ நிழலில் பிரசாரம் செய்தார்கள்.

மொழி வெறியும், இனமாச்சரியமும், குலப் பேதமும் தலைவிரித்தாடிய ஜாஹிலிய்ய சமூகத்திற்கு மத்தியில், எல்லோரும் சமம் என்ற கோட்பாட்டை வஹீயின் மூலம் ஆழமாகப் பதிவுசெய்தார்கள். மனிதர்களே! உங்களை ஓர் ஆண் ஒரு பெண்ணிலிருந்தே நாம் படைத்தோம். நீங்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்காக உங்களைக் கிளைகளாகவும், கோத்திரங்களாகவும் ஆக்கினோம். உங்களில் (இறைவனை) அஞ்சுவோரே அல்லாஹ்விடம் அதிகம் சிறந்தவர். அல்லாஹ் அறிந்தவன்; நன்கறிபவன்."[4]

..........................................................

1. மு.மேத்தா (1998) நபிகள் நாயகம் ஒரு காவியம் ப: 18
2. முஹம்மது ஸுலைமான், ரஹ்மத்துன் லில் ஆலமீன்
3. டாக்டர் சிலம்பொலி சு.செல்லப்பனார்
4. (அல்அஃராப் : 157)

உயர் குலமாகிய தமது குலத்தைச் சேர்ந்த ஒருவரே எல்லோரும் சமம் என்று பிரசாரம் செய்கிறாரே! தாழ்த்தப்பட்டவர்களையும், இழிகுலத்தோரையும், கறுப்பர்களையும், அடிமைகளையும் உயர் குலத்துக்குச் சமம் என்கிறாரே! தம்மோடு சரிக்குச் சரியாக அவர்களையும் மதித்து குலப்பெருமையைக் கெடுக்கிறாரே என்ற ஆத்திரத்தில் தம்மை மிகவும் உயர் குலம் என்று நம்பிய நபிகள் நாயகத்தின் குலத்தினர் கடுமையாக அவர்களை எதிர்த்தார்கள். இவ்வாறு, நாற்பதாம் வயதில் ஆரம்பித்த நபித்துவத்துடனான மக்கா வாழ்க்கை, நபி(ﷺ)அவர்களின் 53 ஆம் வயது வரை நீடித்தது. மக்காவில் வாழ முடியாத சூழல் ஏற்பட்டபோது, மதீனத்து மக்களின் அபிலாஷை நபியவர்களின் வருகையை ஆவலுடன் வேண்டி நின்றபோது, அல்லாஹ்வின் ஆணையும் வந்தவுடன் மதீனா நகரத்திற்கு நபி (ﷺ)அவர்கள் ஹிஜ்ரத் சென்றார்கள்.

**மதீனா வாழ்க்கை :** நபி (ﷺ) போதனை செய்த ஓர் இறைக் கொள்கைப் பிரகடனம் மூலம் ஓரளவு மக்களை அவர்கள் வென்றெடுத்திருந்தார்கள். இரண்டு அகபா உடன்படிக்கைகள் மூலம் மதீனா செல்வதற்கான வழி பிறந்தது. இதன் காரணமாகத் தான் நபி(ﷺ)அவர்கள் மதீனா நகருக்குப் புறப்பட்டார்கள்.அவர்கள் எதிர்பார்த்தது போல் அவ்வூரில் மகத்தான வரவேற்பு அவர்களுக்குக் காத்திருந்தது. மதீனத்து மக்கள் நபி (ﷺ)அவர்கள் பிரசாரம் செய்த கொள்கையையும் ஏற்றார்கள். நபிகள் நாயகத்தைத் தங்களின் தலைவராகவுமஅங்கீகரித்தார்கள்.

மதீனா நகரைச் சுற்றியுள்ள மக்களும் நபி(ﷺ)அவர்களின் ஒழுக்க மாண்புகளையும் தெளிந்த கொள்கைப் பிரகடனத்தையும் கேள்விப்பட்டு, கூட்டம் கூட்டமாக இஸ்லாத்தில் நுழைந்தார்கள். நபி(ﷺ)தமது 63 ஆம் வயதில் மதீனாவில் மரணிக்கும் போது, இன்றைய அமெரிக்காவை விட அதிக நிலப்பரப்பைத் தமது ஆளுகையின் கீழ் கொண்டுவந்திருந்தார்கள்.

பலவாயிரம் பல்துறை ஆளுமைகள் இணைந்து, பல நூறு ஆண்டுகளில் உருவாக்கப்பட வேண்டிய ஓர் அகண்ட ராஜ்ஜியத்தை பத்தே ஆண்டுகளில் நபி(ﷺ)அவர்கள் உருவாக்கினார்கள். எந்த அடக்குமுறையும் இல்லாமல் தமது அழகிய நடவடிக்கைகள் மூலமும் கொள்கைப் பிரசாரத்தின் மூலம் மக்களை வென்றெடுத்து, சமநிலையான சமத்துவ சமுதாய ராஜ்ஜியத்தை உருவாக்கினார்கள். இத்தகைய சாம்ராஜ்ஜியம் நபி(ﷺ)அவர்களுக்கு முன்போ, பின்போ உலகில் எங்குமே ஏற்பட்டதில்லை."அது ஒரு தனித்துவமான சமுதாயம்; வரலாற்றில் அது போன்ற ஒரு சமூகம் என்றும் தோற்றம் பெற்றதில்லை" என செய்யித் குதுப் மஆலிமு பித் தரீக் என்ற தனது நூலில் குறிப்பிடுகின்றார்.

அன்று,இத்தாலியும்,பாரசீகமும் உலகில் மிகவும் வலிமை மிக்க இரு நாடுகளாகவும், மிகப் பெரிய வல்லரசுகளாகவும் இருந்தன. ஆனால், நபி(ﷺ)அவர்கள் பத்தே ஆண்டுகளில் தமது ராஜ்ஜியத்தை உலகின் ஒரே வல்லரசாக உயர்த்தினார்கள். அன்றைக்கு உலகில் மிகவும் வலிமை மிக்க இராணுவ பலம் கொண்டதாகவும், சம்பளத்திற்காக பணி செய்யாத வீரர்களைக் கொண்டதாகவும் நபி(ﷺ)அவர்களின் இராணுவம் மட்டுமே இருந்தது. அது போல் உச்ச அதிகாரம் பெற்ற தலைவராகவும் நபி(ﷺ)அவர்கள் இருந்தார்கள்.

ஆட்சித் தலைமையோடு,அவர்கள் அறிமுகப்படுத்திய இஸ்லாம் என்னும் ஆன்மீகத் துறைக்கும் அவர்களே தலைவராக இருந்தார்கள். நபி(ﷺ)அவர்களின் நடை, உடை, பாவனையைக் கூட அப்படியே பின்பற்றக் கூடிய தோழர்களை நபி (ﷺ) அவர்கள் பெற்றிருந்தார்கள்.

ஆன்மீகத் தலைமையும், கேள்வி கேட்பாரில்லாத, அசைக்க முடியாத ஆட்சித் தலைமையும் அவர்களிடம் இருந்தும் அவர்கள் எவ்வாறு அனைத்து மக்களுடன் நடந்து கொண்டார்கள் என்பதுதான் வரலாற்றில் மிகப் பெரும் கவன ஈர்ப்பை அவர்கள் பால் செலுத்தியது. தலைமைக்கு ஆசைப்படுபவரும், இது போன்ற பதவிகளையும், அதிகாரத்தையும் அடைந்தவரும் எவ்வாறு நடந்து கொள்வார்களோ, அவ்வாறு நபி(ﷺ)அவர்கள் நடக்கவில்லை. பதவியையும், அதிகாரத்தையும் பெற்றவர்கள் அவற்றை எவ்வாறு பயன்படுத்துவார்களோ, அவ்வாறு அவர்கள் பயன்படுத்தவும் இல்லை.

"நபி(ﷺ)அவர்களுடன் நாங்கள் பள்ளிவாசலில் அமர்ந்திருந்தபோது ஒட்டகத்தின் மீது அமர்ந்தவராக ஒருவர் பள்ளிக்குள் நுழைந்தார். பள்ளியிலுள்ளே ஒட்டகத்தைப் படுக்க வைத்துப் பின்னர் அதனைக் கட்டினார். பின்பு அங்கு அமர்ந்திருந்தர்களிடம் "உங்களில் முஹம்மத் அவர்கள் யார்?" என்று கேட்டார். நபி(ﷺ)அவர்களோ மக்களிடையே சாய்ந்து அமர்ந்திருந்தார்கள். "இதோ சாய்ந்து அமர்ந்திருக்கும் இந்த வெண்மை மனிதர்தாம் (முஹம்மத்(ﷺ)அவர்கள்)" என்று நாங்கள் கூறினோம். உடனே அம்மனிதர் நபி (ﷺ) அவர்களை "அப்துல் முத்தலிபின் பேரரே!" என்றழைத்தார். அதற்கு நபியவர்கள் "என்ன விஷயம்?" என்று கேட்டார்கள். அப்போது, அம்மனிதர் நபி(ﷺ)அவர்களிடம் "நான் உங்களிடம் சில

கேள்விகள் கேட்கப் போகிறேன். சில கடினமான கேள்விகளையும் கேட்கப் போகிறேன். அதற்காக நீங்கள் என் மீது வருத்தப்படக் கூடாது" என்றார். அதற்கவர்கள், "நீர் விரும்பியதைக் கேளும்" என்றார்கள். உடனே அம்மனிதர் "உம்முடையதும் உமக்கு முன்னிருந்தோரதும் இரட்சகன் மீது ஆணையாகக் கேட்கிறேன். அல்லாஹ்தான் உம்மை மனித இனம் முழுமைக்கும் தூதராக அனுப்பினானா?" என்றார். அதற்கு அவர்கள் "அல்லாஹ் சாட்சியாக ஆம்!" என்றார்கள்."[1]

**"உங்களில் யார் முஹம்மத்" என்று மற்றவர்கள் கேட்டுத் தெரிந்து கொள்ளும் வகையில் மிகவும் எளிமையாக நடந்து கொண்டார்கள்.** "நான் அப்துல்லாஹ்வின் மகன் முஹம்மத் ஆவேன். அல்லாஹ்வின் அடியானும், அவனது தூதருமாவேன். எனக்கு அல்லாஹ் தந்த தகுதிக்கு மேல் என்னை உயர்த்துவதை அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் விரும்ப மாட்டேன் என்றார்கள்."[2]

**மக்கா காலத்திலும் மதீனாவில் அட்சி அதிகாரம் இருக்கும் போதும், அவர்கள் பிற இன மக்களுடன் மிகவும் நளினமாக நடந்து கொண்டார்கள் என்பதற்கு வரலாற்றில் ஏராளமான சான்றுகள் உள்ளன.**

"துவேஷம் என்னும் கருமேகக் கூட்டத்தை விலக்கி விட்டு உண்மையென்னும் கதிரவன் ஒளிபரப்பும் நன்னாள் ஒன்று வரலாம். அப்போது மேல் நாட்டு ஆசிரியர்கள், முஹம்மது ஒரு சரித்திர நாயகர் என்று கூறுவதோடு, இப்போது நிறுத்திக் கொள்கிறார்களே, அப்படியன்றி, அதற்கப்பால் சென்று அவர்களுடைய வாழ்க்கையை அணுகி, ஆராய்ந்து, மனிதத்துவத்தின் வரலாறு என்ற பொன்னேடுகளில் நபி முஹம்மது அவர்களுக்குரிய இடத்தை அளிப்பார்கள்" **என்று வாஷிங்டன் இர்விங் கூறுகின்றார்.**

**மதீனா சென்றவுடன் இன நல்லுறவை கட்டி எழுப்பத் தேவையான அனைத்தையும் ஆழ்ந்த அவதானத்துடனும் தூர நோக்குடனும் மேற்கொண்டார்கள். எங்கு இனப்பிரச்சினை காணப்படுகிறதோ, அந்த நாட்டில் உள்ள எல்லா வளங்களும் வீணாகும், இதை நன்கு உணர்ந்த நபியவர்கள் மதீனாவில் இன நல்லுறவைக் கட்டி எழுப்புவதை முதன்மையான பணியாகச் செய்தார்கள். அந்தவகையில் மதீனா சாசனம் மிகுந்த முக்கியத்துவத்தைப் பெறுகிறது.**

**மதீனா சாசனம்**

**நபி(ﷺ)அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் சென்று, அங்கு ஒரு சிறந்த, முன்மாதிரியான சமூக அமைப்பை தோற்றுவித்தார்கள். மதீனாவில் வாழ்ந்த முஸ்லிம்களுடனும் யூத –கிருஸ்தவ சமூகங்களுடனும், பிற சமயங்களைப் பின்பற்றியவர்களுடனும் அரசியல் உடன்படிக்கை ஒன்றைச் செய்தார்கள். இவ்வாறு, அவர்கள் செய்து கொண்ட உடன்படிக்கையே மதீனா சாசனம் அல்லது, பிரகடனம் அல்லது, ஆவணம் என அழைக்கப்படுகிறது. நபி(ﷺ)அவர்கள் மதீனாவில் உருவாக்கிய ஒப்பந்தம், ஒப்பந்தம் என்பதற்கும் மேலானதாகும்.**

மதீனாவின் பல்வேறு குழுவினரை நபி(ﷺ)அவர்கள் இந்த யாப்பின் மூலம் ஒன்றுபடுத்தினார்கள். இந்த ஒப்பந்தத்தின் பழைய மூலாதாரங்களின்படி இது கூஅல் கிதாப எனவும் "அல் ஸஹீபா" என்றும் கூறப்படுகிறது. நவீன ஆய்வுகள் "அல் துஸ்தூர்" (அரசியல் யாப்பு) அல்லது "வதீக்கா" (ஆவணம்) என்றும கூறுகின்றன.(Akram Diya al Umari, 1991:99)

**அன்று, ஏன் இத்தகையதொரு அரசியல் சாசனம் ஏன் தேவைப்பட்டது? சமயம், இனம், வர்க்கம், நிலையாக வாழ்வோர், அகதிகள் என்று பல அடிப்படையான வேறுபாடுகளைக் கொண்ட மக்கள் குழுவினரை இவ்வொப்பந்தத்தின் மூலம் நபி(ﷺ)அவர்கள் ஒன்று படுத்தினார்கள்.**

**மதீனா ஒப்பந்தத்தின் வடிவத்தையும், கட்டமைப்பையும், சொற்பொருளியல் மரபுகளையும் விரிவாக ஆராய்ந்துள்ள** R.B. SERJEANT **இது பற்றிய கருத்தை பின்வருமாறு கூறுகிறார்:**

வரலாற்றாசிரியர்கள், அவர்கள் முஸ்லிம்களாக இருந்தாலும், மேற்கத்திய, கீழத்தேயவியலாளர்களாயிருந்தாலும் மதீனா அரசியல் யாப்புப் பற்றி மிகக் குறைந்த அளவு கவனமே செலுத்தியுள்ளனர். இது உண்மையிலேயே ஆச்சரியத்திற்குரியதாகும். இஸ்லாத்தின் ஆரம்பத் தோற்றத்தைப் பொறுத்தவரை, வரலாற்றுக் கண்ணோட்டத்தில் இவ்வுடன்படிக்கை அதிக ஆவலைத் தரத்தக்கதும், முக்கியத்துவமிக்கதுமாகும். மேலும் ஐயத்திற்கிடமற்ற வகையில் உண்மையான யாப்புமாகும்." (R.B. Serjeant, 1981 V-2)

……………………………………..

1. புகாரி : 63
2. அஹ்மத் 12093

நபி(ﷺ)அவர்கள் மதீனாவுக்கு ஹிஜ்ரத்தை மேற்கொண்ட போது, அங்கு அகபா உறுதி மொழிகளின் பின் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட மதீனா முஸ்லிம்களும், மக்கத்து முஸ்லிம்களும் இவர்கள் அல்லாத யூத – கிறிஸ்தவர்களும், ஏனைய விக்கிரக வணக்கஸ்தர்களும் நெருப்பு வணங்கிகளும் காணப்பட்டனர்.

இவ்வாறு, பல்வேறு பிரிவுகளாக காணப்பட்ட மக்களுக்கு மத்தியில் ஓர் அரசை நிறுவுவதாயின் அம்மக்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் நிலையிலான உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்துவது அத்தியாவசியத் தேவையாக இருந்தது.

நாம் இன்று நடைமுறையில் பார்க்கின்றபோது, பெரும்பான்மையாக வாழுகின்ற சமூகம் சிறுபான்மையினரின் உரிமைகளை, அபிலாஷைகளை அனுசரிக்காமல் நடப்பதால் பல பாரிய பிரச்சினைகள் எழுந்து அது விஸ்வரூபமெடுத்து இறுதியில் அது ஆயுதப் போராட்டமாக உருமாறி அழிவையும் நாசத்தையும் உண்டு பண்ணுவதை அவதானிக்கின்றோம். அதே போன்று அன்று முஸ்லிம் அல்லாதவர்களின் விருப்பு வெறுப்புகளை அனுசரிக்காமல் அரசொன்றை நிறுவுவது நடைமுறையில் பல சிக்கல்களை ஏற்படுத்தும் எனக் கருதிய நபி(ﷺ)அவர்கள், இவர்கள் அனைவரையும் சாசனம் ஒன்றின் கீழ் ஒத்துழைக்க வைக்கும் பொருட்டு இச்சாசனத்தை உருவாக்கினார்கள் எனப் பொதுவாகக் கருதலாம்.

பல்வேறு, எதிர்பார்ப்புக்களைக் கொண்ட மக்களிடம் ஒன்றுபட்ட நிலையை அடைவதாயின், அவர்கள் அனைவரையும் ஒருங்கிணைக்கும் உடன்பாடொன்று அவசியம் தேவைப்பட்டது.

மதீனா சாசனத்தின் உள்ளடக்கத்தினை கவனத்திற் கொண்டு வரலாற்றாசிரியர்கள் சிலர், "உலகில் தோன்றிய அரசியல் சாசனங்களில் இறைமையுடைய முதன்மையான அரசியல் சாசனம் மதீனா சாசனமேயாகும்" என சிலாகித்துக் கூறுகின்றனர்.

மதீனா சாசனத்தில் அரச தலைவரினதும், அவ்வரசின் குடிமக்களினதும் கடமைகள், உரிமைகள் வகுக்கப் பட்டிருந்தன. ஏனைய சமயத்தவர்களின் சமய உரிமைகளும் இதில் குறிப்பிடப்பட்டிருந்தன.

இவ்வுலகில் காணப்படுகின்ற அரசியல் யாப்புகள் அல்லது சாசனங்களில் குடிமக்களின் கடமைகள், உரிமைகள், சுதந்திரங்கள் சரியான முறையில் வகைப்படுத்தப்படாதபோது, மக்கள் தங்களது உரிமைகளைப் பெறுவதற்காக போராட்டங்கள் நடத்துவதைப் பார்க்கிறோம். ஆனால், மதீனா சாசனமானது இந்த நிலையிலிருந்து வேறுபட்டு, ஆட்சி எல்லைக்குள் வாழ்ந்த அனைத்து சமூகங்களின் நலனையும் அதன் கட்டமைப்பையும் பாதுகாக்கும் வகையில் அமைந்து காணப்பட்டது.

மதீனா சாசனத்தை முழுமையாக நோக்குகின்றபோது, அது 47 நிபந்தனை(ஷர்த்துக்)களைக் கொண்டதாகக் காணப்படுகிறது. முதல் 23 ஷர்த்துக்களும் முஸ்லிம்களான அன்ஸார், முஹாஜிர்களின் கடமைகள், உரிமைகள் பற்றியும், பிந்திய 24 ஷர்த்துக்களும் இவ்வுடன்படிக்கையில் அல்லது சாசனத்தில் முந்திய கையெழுத்திட்ட ஏனையோர்களது கடமைகள், உரிமைகள் பற்றியும் குறிப்பிடுகின்றன. இதில் முக்கியமான சிலதை நோக்குவோம்.

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்; இந்த சாசனம் இறைத்தூதர் முஹம்மத்(ﷺ)அவர்களுக்கும், முஃமின்களான குறைஷ், (யத்ரிப்) மதீனா முஸ்லிம்களுக்கும் அவர்களுடன் இணைந்திருப்போருக்கும், அவர்களோடு இராணுவக் கூட்டாக இருப்போருக்குமிடையில் எழுதப்பட்டது. அவர்கள் அனைவரும் ஏனையவர்களிலிருந்து வேறுபட்ட ஒரே சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.

* இவ்வுடன்படிக்கையில் கைய்யொப்பமிடும் அனைவரும் ஒரே நாட்டுப் பிரஜைகளாகக் கருதப்படுவர்.
* ஒவ்வொருவரும் தத்தம் மதத்தின்படி ஒழுகிவர முழு உரிமையும், சுதந்திரமும் வழங்கப்பட்டுள்ளனர்.
* தத்தம் கோத்திர குற்றவாளிகள் செலுத்த வேண்டிய நஷ்ட ஈட்டுத் தொகையை செலுத்துதல், சிறைக் கைதிகளை விடுவித்தல் அந்தந்த கோத்திரத்தின் கடமையாகும்.
* தான் செலுத்த வேண்டிய நஷ்டயீட்டுத் தொகையைக் கொடுத்தல், கைதியை விடுதல் ஆகியவை ஒவ்வொரு முஸ்லிமின் கடமையாகும். அவர் அதற்குச் சக்தி பெறாவிட்டால் முழு சமூகமும் அதனைப் பொறுப்பேற்கும்.
* சமூக விரோதச் செயல்கள் புரியும் எவரையும் பகிரங்கமாக எதிர்ப்பது அனைவரது கடமையாகும்.
* ஒரு முஸ்லிமுக்கெதிராக காஃபிருக்கு உதவுவதோ, காஃபிருக்காக முஸ்லிமை பழிவாங்குவதோ கூடாது.
* நபிகளாருடன் ஒப்பந்தம் செய்து கொண்டவர்களுக்கு உதவுவது முஸ்லிம்களின் கடமையாகும்.

* குற்றம் செய்தோர் யாராக இருந்தாலும் தண்டிக்கப்படுவர். குற்றம் செய்தவரை நெருங்கிய உறவினர்கள் ஆதரிக்கக் கூடாது.
* மதீனாவை இரத்தம் சிந்தப்படாத புனித நகரமாக அங்கீகரிப்பர்.
* உடன்படிக்கையில் கையொப்பமிடும் எவரும் நபி (ﷺ) அவர்களின் அனுமதியின்றி இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்ளக் கூடாது.
* முஸ்லிம்களையோ, உடன்படிக்கையில் கையொப்பமிட்ட ஏனையவர்களையோ மற்றெவரும் தாக்கினால் முஸ்லிம்களும், யூதர்களும், ஏனையவர்களும் இணைந்து அவர்களை எதிர்க்க வேண்டும்.
* மதீனா எதிரிகளால் தாக்கப்படின் யூதர்களும், முஸ்லிம்களும் தோளோடு தோள் நின்று தற்காப்பு யுத்தம் செய்ய வேண்டும்.
* எவரும் எக்காரணத்தைக் கொண்டும் மக்கா நகர் குறைஷிகளுக்கு உதவி செய்யக் கூடாது.
* இச்சாசனத்தின் மூலம் முன்பிருந்த விரோதங்கள் யாவும் நீங்கிவிட்டதாகக் கருதப்படும். மதீனாவுக்குள் பிரவேசிக்கும் ஒவ்வொருவருக்கும் இச்சாசனத்தில் உள்ளதைச் செயல்படுத்துவதில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு நபியவர்கள் கூறும் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

மேற்படி ஷர்த்துக்களோடு, தனித்தனி கோத்திரங்கள் பற்றியும் சாசனம் கூறுகிறது. இவைகள் தவிர இன்னும் பல நிபந்தனைகளும் அதில் காணப்படுகின்றன. (இபுனு ஹிஷாம்:503, 504/1)

“நபி முஹம்மது (ஸல்) அவர்கள் ஏற்படுத்திய மதீனா உடன்படிக்கையே முதல் இஸ்லாமிய அரசியல் சட்டமாக அமைந்தது. இச்சட்டம் மதீனாவில் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையின் அடிப்படை உரிமைகளைப் பெற்றுத் தந்தது. மதீனாவின் சாசனம் புனித குர்ஆன் மற்றும் சுன்னாவின் அடிப்படையில் உருவாக்கப்பட்டது. தனிப்பட்ட விருப்பு வெறுப்பின்றி தன்னலமில்லாத, பாகுபாடில்லாத, எங்குமே காணமுடியாத பெருந்தன்மையுடன் மன்னிக்கும் பண்பு ஆகியவற்றை உள்ளடக்கிய சட்டமாக அமைந்தது” என www.maalaimalar.com குறிப்பிடுகிறது.

# நபிகள் பெருமானாரின் வழிகாட்டல்கள்

இன்று நமது நாட்டில் தவறான புரிந்துணர்வு காரணமாக இன முறுகல் வலுவடைந்துள்ளது. மதங்களைத் தூற்றும் அநாகரிக செயற்பாடுகள் உலகளவிலும் அதிகரித்துள்ளன. தான் பின்பற்றும் மதத்தின் மீது வெறித்தனமும் மற்ற மதத்தவர்கள் மீது வெறுப்பும் வெளிப்படுத்தப்படுகிறது. பெரும்பான்மை சமூகத்திலுள்ள சில குழுக்களின், சிறுபான்மை இனத்தின் மத உணர்வுகளை கொச்சைப்படுத்தும், நிந்தனை செய்யும் பல இழி நடவடிக்கைகள் இணையம் முதல் தெருமுனை வரை வியாபித்துள்ளன.

இன்று போல் அன்றும் மத நிந்தனை நிலை காணப்பட்டது. பலதெய்வ சிலை வணக்கமும், இனமாச்சரியமும், நிறவெறியும், ஆன்மிக தகிடுதத்தமும் ஆதிக்கம் செலுத்தி, கொடுங்கோண்மை கோலோச்சிய ஒரு பெரும்பான்மை சூழலில் ஒற்றை மனிதனாக வேர் முதல் விழுதுகள் வரை சீர்திருத்தம் செய்ய முனைந்தால் என்னவாகும் என்பதை கற்பனையில் கூட கற்பிதம் செய்ய முடியாது. எத்தகைய சூழ்நிலையை சந்திக்க நேரும்? என்று எண்ணிப் பாருங்கள் அத்தகைய அந்நியமான சூழலில்,நபி (ﷺ) அவர்கள் ஓரிறைக் கொள்கையை ஆணித்தரமாகப் பிரசாரம் செய்து, அங்கு புரையோடியிருந்த அனைத்து வகையான சமூகத் தீமைகளையும் எதிர்த்ததால் பெரும்பான்மை சமூகம் அவர்களை நசுக்க முனைந்தது.

அந்நியமான சூழலில் ஆரம்பிக்கப்பட்ட தனது சீர்திருத்தப் பாதையில் ஏராளமான கொடுமைகளை சந்தித்தார்கள். அவரை ஏற்றுக் கொண்ட பல தோழர்கள் எதிரிகளால் சித்திரவதைக்கு அளாக்கப்பட்டு, கொன்று குவிக்கப்பட்டர்கள். முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் மீதும் கொலை வெறித் தாக்குதல் திட்டம் வகுக்கப்பட்டதால், ஊரை விட்டே ஹிஜ்ரத் எனும் தியாகப் பயணம் மேற்கொண்டார்கள்.

தனது பிரசாரத்தை ஆரம்பித்த மக்கா சூழல் மிக மோசமாகக் காணப்பட்டது. தான் முன்வைத்த ஓர் இறைக் கோட்பாட்டில் அவர்கள் எந்த சமரசமும் செய்யவில்லை. அதே வேளை தன்னை சூழ வாழ்ந்த பெரும்பான்மை மக்களுடன் அவரது அணுகுமுறை மற்றவர்கள் வியப்படையும் வகையில் மிக நெருக்கமாகவும் வித்தியாசமாகவும் இருந்தன என்பதற்கு ஏராளமான சான்றுகள் உள்ளன. “எந்த சகோதரத்துவ அடிப்படையில் புதிய உலகத்தை நிர்மாணிக்க வேண்டுமென்று இன்றைய நாகரிக உலகம் விரும்பி நிற்கிறதோ, அதே சகோதரத்துவத்தை அன்றைக்கே பாலைவனத்தில் ஒட்டகம் ஓட்டிக்கொண்டிருந்த மனிதரால் பிரசாரம் செய்யப்பட்டது. அந்த மனிதர், ஏக சகோதரத்துவத்துக்கு ஒரு சரியான விளக்கம் கூறினார். எந்த விதமான உயர்வும் தாழ்வும் வேற்றுமையும் இல்லாத மக்களைக்கொண்ட ஒரு

குடிஅரசு எப்படி இருக்கவேண்டும் என்பதையும் அவரே விளக்கினார்" என பிரபல தென்னிந்திய எழுத்தாளர் பா. ராகவன் குறிப்பிடுகின்றார்.

இனி, பல்லின சமூகங்களுக்கிடையிலான நட்புறவை வளர்ப்பதற்கும் பேணி நடப்பதற்கும் நபிகள் பெருமானாரின் அவ்வழிகாட்டல்கள் சிலவற்றை இங்கு நோக்குவோம்.

**தேசியம், மொழி உணர்வுகள் அகற்றப்படல் :** ஒரு மனிதன் தான் பிறந்த நாட்டை நேசிக்க வேண்டும். ஆனால், அது வெறித்தனமாக மாறக் கூடாது. மனிதர்களிடையே ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளுக்கு வித்திடும் தீய சத்துக்களாக தேசப் பற்றும், மொழி வெறியும் திகழ்கின்றன. இலங்கையில் 30 ஆண்டுகள் யுத்தம் நடந்ததற்கும் இலட்சக்கணக்கான உயிர்கள் பலியாவதற்கும் இந்த மொழி வெறியும் இனவெறியும் தான் காரணம்.

இந்தக் குறுகிய சிந்தனையை உள்ளத்திலிருந்து இஸ்லாம் கழற்றி விடுகின்றது. "(தன்) இனத்தை ஆதரித்து, குருட்டு சிந்தனை என்ற கொடியின் கீழ் போரிட்டு கொல்லப்படுபவரின் மரணம் அறியாமைக் காலத்து மரணமே" என்று அல்லாஹ்வின் தூதர் (ﷺ) அவர்கள் கூறினார்கள். நூல்: முஸ்லிம் : 3440

இரு சமுதாயங்களுக்கு மத்தியில் ஏதேனும் விவகாரம் ஏற்பட்டால், அந்த விவகாரத்தில் நியாயம், அநியாயம் என்ற அடிப்படையில் தான் பார்க்க வேண்டுமே தவிர, இவர் நம் இனத்தவர், இவர் நம் எதிரி இனத்தார் என்று பார்க்கக் கூடாது. அப்படிப் பார்க்கின்ற அந்த உணர்வுக்குப் பெயர் தான் தேசியம்! மொழி உணர்வு! என் நாடு உயர்ந்தது, என் மொழி உயர்ந்தது என்ற சிந்தனையால் மனிதர்கள் சண்டையிட்டுக் கொள்கின்றனர். இத்தீமைக்கு வித்திடும் இந்தக் குறுகிய சிந்தனையை, தேசியம் மற்றும் மொழி வெறியின் குரல்வளையைப் பிடித்து திருக்குர்ஆன் நெறித்து விடுகின்றது. எந்த மொழி பேசுபவனாக இருந்தாலும் உலகில் அவன் எந்த நாட்டைச் சேர்ந்தவனாக இருந்தாலும் அவன் ஆதமின் மகன் தான்; அவனும் உன் சகோதரன் தான். எனவே, நீங்கள் எந்தப் பகுதியில் வாழ்ந்தாலும் ஒரு குலத்தார் தான். உங்கள் இறைவன் ஒரே இறைவன் தான் என்று திருக்குர்ஆன் உணர்த்துகின்றது.(அல் ஹுஜ்ராத் :13) உங்களில் ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசுவதால் ஒருவர் உயர்ந்தவர் ஆகி விட மாட்டார் என்பதை நபியவர்களும் ஆணித்தரமாகப் பிரகடணப்படுத்துகின்றார்கள்.

"மக்களே! உங்கள் இறைவன் ஒரே ஒருவன் தான். உங்களுடைய தந்தை ஒருவர் தான். ஓர் அரபியருக்கு அரபியல்லாதவரை விடவும், ஓர் அரபியல்லாதவருக்கு அரபியரை விடவும், ஒரு கருப்பருக்கு சிவப்பரை விடவும், ஒரு சிவப்பருக்கு ஒரு கருப்பரை விடவும் எந்தச் சிறப்பும் இல்லை, இறையச்சத்தைத் தவிர!" (நூல்: அஹ்மத் 22391) என்று மொழி வெறி பிடித்த அன்றைய அரபியரைப் பார்த்து, உலக மக்கள் அனைவரும் கூடி நிற்கும் ஹஜ்ஜின் போது இந்தச் சகோதர முழக்கத்தை, தீண்டாமை ஒழிப்புப் பிரகடனத்தை அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் செய்கின்றார்கள்.

"தீண்டாமையைப் பெயரளவுக்கு இல்லாமல், செயலளவில் ஒழித்து காட்டியது திருக்குர்ஆனும், அதைப் போதிக்க வந்த திருத்தூதர் (ஸல்) அவர்களும் தான். ஒரு குறிப்பிட்ட பகுதியில் நிலவும் தீண்டாமையை அல்ல, உலகம் முழுவதும் பல்வேறு பெயர்களில் பல்வேறு கோணங்களில் பரவிப் பீடித்துள்ள இந்தத் தீண்டாமை நோயைத் தீர்க்கும் மருந்து திருக்குர்ஆனிலும், அது கூறும் திருத்தூதரின் பாதையிலும் தான் உள்ளது" என www.maalaimalar.com குறிப்பிடுகிறது.

**அந்நிய மக்களுடன் உறவைப் பேணிய அண்ணலார் :** மக்கா சூழலில் அவர்கள் தனது சமூகத்துடன் நடந்து கொண்ட முறையை பின்வரும் நபிமொழி மிகத் தெளிவாக உணர்த்துகிறது.

"(நபியே!) உங்களுடைய நெருங்கிய உறவினர்களுக்கு எச்சரிக்கை செய்யுங்கள்" எனும் இந்த (26:214ஆவது) இறைவசனம் அருளப்பெற்றபோது,அல்லாஹ்வின் தூதர்(ﷺ)அவர்கள் குறைஷியரை (ஓரிடத்திற்கு) அழைத்தார்கள். அவர்கள் அனைவரும் ஒன்றுகூடினர். அப்போது பொதுவாகவும் தனித்தனியாகவும் பெயர் குறிப்பிட்டு, "கஅப் பின் லுஅய்யின் மக்களே! உங்களை நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள். முர்ரா பின் கஅபின் மக்களே! உங்களை நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள். அப்து ஷம்சின் மக்களே! உங்களை நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள். அப்து மனாஃபின் மக்களே! உங்களை நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள். ஹாஷிமின் மக்களே! உங்களை நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள். அப்துல் முத்தலிபின் மக்களே! உங்களை நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்ளுங்கள். (என் மகள்) ஃபாத்திமாவே! உன்னை நரக நெருப்பிலிருந்து காப்பாற்றிக் கொள்! ஏனென்றால், அல்லாஹ்விடமிருந்து வரும் (முடிவாகிவிட்ட சோதனை) எதிலிருந்தும் உங்களைக் காக்க என்னால் இயலாது. ஆயினும், உங்களுடன் எனக்கு இரத்த உறவு உண்டு. அதை நான் (காய்ந்துபோகவிடாமல்) பசுமையாக்குவேன் (உங்களுடைய உறவைப் பேணி நடந்துகொள்வேன்)" என்று கூறினார்கள். அறிவிப்பவர் அபூஹுரைரா (ரலி) அவர்கள் ஆதாரம்: ஸஹீஹ் முஸ்லிம்

தன்னையும் தன்னை ஏற்றுக் கொண்ட சிறுபான்மை மக்களையும் 13 ஆண்டுகள் வஞ்சித்த வன்நெஞ்சர்கள் மீது ஆதிக்கம் செலுத்தும் வாய்ப்பு வெகுவிரைவிலேயே நபி(ﷺ)அவர்களுக்குக் கிடைத்தது. தனது அயராத

முயற்சியால் மதீனாவில் ஓர் ஆட்சியை அமைத்தார்கள். அதன் இராணுவக் கட்டமைப்புப் போன்று இன்று வரை உலகில் எங்கும் காணமுடியாது. அதன் தளபதி நபி(ﷺ)அவர்கள். தனது சொந்த உழைப்பில் இராணுவத் தளபாடம் வாங்குவார். அவரது சிப்பாய்களும் அப்படியே செயற்பட்டனர். இன்றைய கட்டளைத் தளபதி போல், கட்டிலில் உறங்கிக் கொண்டு, கள நிலவரத்தை காலைப் பத்திரிகையில் படித்துப் பார்ப்பவராக அவர் இருக்கவில்லை. களத்தில் அவர் முன்னிலை வகித்தார்கள். யுத்த வியூகங்களை வகுத்தார்கள். அகழ் வெட்டினார்கள். எதிரிகளோடு நேருக்கு நேர் மோதினார்கள். காயங்களுக்கு ஆளாகி, வீரத் தழும்புகளை, வீரத்தின் அடையாளமாகக் கொண்டிருந்தார்கள். ஓர் ஆன்மிகத் தலைவர், அரசியல் தலைவராகவும், களத்தில் நேரடி யுத்தம் செய்யும் தளபதியாகவும் வாழந்த பக்கங்கள் வரலாற்றில் இந்த மாமனிதரைத் தவிர வேறுயாரிடமும் காண முடியாது.

ஓர் இறைக் கோட்பாட்டாலும் அதனால், ஏற்பட்ட அன்பால் பிணைக்கப்பட்ட வலுவான சமூகக் கட்டமைப்பாலும் அதிலிருந்து தேர்வுசெய்யப்பட்ட, ஊதியத்திற்கு ஊழியம் புரியாத, தன்னார்வத் தொண்டரணியும், அவரது அதிகாரபீடத்தைச் சூழ இருந்த பெரும் மன்னர்கள் அச்சம் கொள்ளும் அளவு வலுவான இராணுவ பலமும் காணப்பட்டது.

அதிகார பலம் வந்த பின்னர் தன்னைத் தாய் மண்ணலிருந்து விரட்டிய விரோதிகளை நபியவர்கள் வஞ்சம் தீர்த்திருக்கலாம். அவ்வாறு பழிக்குப் பழி தீர்ப்பது, அரசியலில் இற்றைவரை சர்வசாதாரணமானது. அதனால், அதை யாரும் குறை காண முடியாத அளவுக்கு நபி(ﷺ)அவர்களுக்கு நியாயங்கள் இருந்தன. ஆனால், நபி (ﷺ) அவர்கள் தமது கை முழுமையாக ஓங்கியிருந்த காலகட்டத்திலும் யாரையும் பழிவாங்கவில்லை. எளிமையான தனது ஆரம்ப நாட்கள் போன்று மன்னிக்கும் மனப்பான்மையுடனும் அனைத்து இன மக்களையும் அன்புடன் அரவணைக்கும் பண்புடனும் நடந்து கொண்டார்கள். அதிகாரம், பண வசதி இவை இரண்டும் வந்த பின்னர் இவ்வாறு நடப்பது மிகமிகக் கஷ்டமானது. எனினும், அந்த மாமனிதர் உலகம் வியக்க வாழ்ந்து காட்டினார்கள். “நபிகள் நாயகம் தோற்றுவித்த தெய்வத்தன்மை பொருந்திய புனிதமான அரசாங்கம் முழுக்க முழுக்க ஜனநாயகக் கொள்கையை மேற்கொண்டதாகும். மனித குலம் முழுவதும் பின்பற்றத் தக்க உயரிய கோட்பாடுகளை உடையது. நபிகள் நாயகம் கொண்டுவந்த இஸ்லாம். அனைத்தையும் உள்ளடக்கியது. இஸ்லாம் அகிலமே ஏற்றுக்கொள்ளக் கூடியது. அண்ணல் நபிகள் எளிய வாழ்க்கை அவருடைய மனிதத்தன்மையை தெளிவாக்கியுள்ளது” என பெர்னாட்ஷா குறிப்பிடுகின்றார்.

சிறுபான்மை சூழலில் வாழும் இலங்கை முஸ்லிம் உம்மத், முன்மாதிரிமிக்க நபியவர்களின் வரலாற்று ஆதாரங்களின் பக்கம் கவனக் குவிப்பை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காக சில முன்மாதிரி நடவடிக்கைகளை இங்கு தருகின்றேன்.

**ஒப்பந்தமும் விட்டுக் கொடுப்பும் :**தனக்கும் தன்னை இறைத் தூதராக ஏற்றுக் கொண்டோருக்கும் அநீதி இழைத்து, பொருளாதாரப் பறிமுதல் செய்து, நாடுகடத்தி, பெரும் அக்கிரமம் மேற்கொண்ட எதிரிகளுடன் நபியவர்கள் நடந்து கொண்ட முறைக்கு ஹுதைபிய்யா உடன்படிக்கையும், அப்போது நடந்த நிகழ்வுகளும் மிகச் சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றன. அத்தோடு, மக்கா வெற்றியின் போது, அவர்கள் கடைப்பிடித்த பொது மன்னிப்பு முறை பொன் எழுத்துக்களால் வரலாற்றுப் பக்கங்களில் பதியப்பட்டுவிட்டது.

வரலாற்றுக் காலம் முதல் கஃபா பொது உடமையாகவே இருந்துவந்தது. யாரும் உம்ரா – ஹஜ் வணக்கம் செய்வது தடுக்கப்படவில்லை. அந்தவகையில், ஹிஜ்ரி 6ம் ஆண்டு 360 மைல்களுக்கு அப்பாலுள்ள மதீனாவிலிருந்து, நபி(ﷺ)அவர்கள் தமது தோழர்களுடன் உம்ரா எனும் வணக்கத்தை நிறைவேற்ற மக்காவை நோக்கிப் புரப்பட்டார்கள். யாரையும் தடுக்காத மக்கா சுதேசிகள், நபிகள் நாயகத்தை மட்டும் ஹுதைபிய்யா என்ற இடத்தில் வைத்துத் தடுத்தார்கள்.

ஆள்பலமும் அதிகாரபலமும் இருந்த நபி(ﷺ)அவர்கள் பலப் பிரயோகம் செய்து, தான் பிறந்த மக்காவுக்குள் தன்னால் நுழைய முடியும் என்றாலும் எல்லா வகையிலும் விட்டுக் கொடுத்து, நிதானமாக, தொலைநோக்கோடு, எதிரிகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்டு, இரத்தம் சிந்துவதைத் தவிர்த்து மதீனாவிற்குத் திரும்பி வந்தார்கள்.

பலம் பொருந்திய பெரும்பான்மை சூழ்நிலையிலும் பலவீனமாக இருந்த சிறுபான்மை சூழ்நிலையிலும் சமாதானத்தையே விரும்பினார்கள். தமக்கு வன்கொடுமைகள் செய்த எதிரிகளை பழி தீர்க்க தகுந்த சந்தர்ப்பம் கிடைத்தும் மன்னித்துவிடுவது இந்த மாமனிதரின் மதம் கடந்த மனித நேயத்திற்குச் சான்றாக அமைந்துள்ள வரலாற்றை ஹதீஸ்களில் காணலாம்.

**பிறமதத்தினருக்கு பொருளாதார உதவி :** வசதி படைத்தோருக்கு ஸகாத் எனும் ஏழைக்கான தர்மம் இஸ்லாத்தில் கட்டாயக் கடமையாக்கப்பட்டுள்ளது. முஸ்லிம் செல்வந்தர்களிடம் திரட்டப்படும் இந்த நிதி எட்டு விதமான பணிகளுக்குச் செலவிடப்பட வேண்டும். முஸ்லிம் அல்லாதவர்களுடன் நல்லிணக்கம் வளர்வதற்காக

**அவர்களுக்காக வழங்குவதும் அப்பணிகளில் ஒன்று என அல்குர்ஆன் கூறுகிறது.** "யாசிப்போருக்கும், ஏழைகளுக்கும், அதை வசூலிப்போருக்கும், உள்ளங்கள் ஈர்க்கப்பட வேண்டியவர்களுக்கும், அடிமை(களை விடுதலை செய்வதற்)கும், கடன்பட்டோருக்கும், அல்லாஹ்வின் பாதையிலும், திக்கற்றோருக்கும் தர்மங்கள் உரியனவாகும். இது அல்லாஹ்வின் கடமை. அல்லாஹ் அறிந்தவன்; ஞானமிக்கவன்.

(அல்குர்ஆன் 9:60)

**மாற்று மதத்தினருக்கு பொருளாதார உதவிகள் செய்வதை இஸ்லாத்தின் ஐந்து கடமைகளில் ஒன்றாக ஆக்கியுள்ளது, இஸ்லாம். இஸ்லாம் தவிர்ந்த வேறு எந்த மதத்திலும் பிற மதத்தினருக்கு உதவுவது மார்க்க ரீதியாக கட்டாயக் கடமையாக ஆக்கப்பட்டதில்லை. எந்த மதத்திலும் இத்தகைய ஒரு சட்டத்தைக் காணவே முடியாது. நபி(ﷺ)அவர்கள் தனது இஸ்லாமிய ஆட்சியில் சிறுபான்மையாக வாழும் முஸ்லிமல்லாதவர்களுக்கு முஸ்லிம் அரசின் கருவூலத்திருந்து வழங்கினார்கள்.**

ஒரு மனிதர், நபி(ﷺ)அவர்களிடம் வந்து இஸ்லாத்தின் பெயரால் உதவி கேட்டார். இரு மலைகளுக்கிடையே அடங்கும் அளவுக்கு அவருக்கு ஆடுகளை வழங்கினார்கள். அவர் தனது சமுதாயத்திடம் சென்று "என் சமுதாயமே! நீங்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்! ஏனெனில், நிதி நெருக்கடியைப் பற்றி அஞ்சாமல் முஹம்மத் வாரி வழங்குகிறார்" எனக் கூறினார். நூல் : முஸ்லிம் 4627

**முஸ்லிம்கள் பெரும்பான்மையாக, முஸ்லிமல்லாத மக்களின் தயவு தேவையற்ற நிலையில் இருந்த வேளையில், முஹம்மத் நபி(ﷺ)அவர்கள் முஸ்லிம்களிடம் வசூலிக்கப்படும் ஸகாத் நிதியிலிருந்து முஸ்லிமல்லாத மக்களுக்கு வாரி வழங்கினார்கள் என்றால், அந்த மாமனிதரின் மதம் கடந்த மனிதாபிமானத்தை தெளிவாக அறியமுடிகிறது**. "முஹம்மது நபியின் வெற்றிக்கு முதல் காரணம், அவர்கள் கொண்டிருந்த உறுதியும் ஊக்கமும். இத்தகைய உறுதி அந்தக் காலச் சூழ்நிலையில் ஏற்படுவது எளிதன்று. இரண்டாவது காரணம். இஸ்லாம் போதிக்கும் சமத்துவமும் சகோதரத்துவமுமாகும்" **என எஸ். எச். லீடர் வியக்கின்றார்.**

**அந்நிய அண்டை வீட்டாருடன் நல்லுறவு : இஸ்லாத்தை ஏற்காத பிற மதத்தவர்கள் நமது அண்டை வீட்டில் வாழ்ந்தால் அவர்களுடன் மிக அன்பாக நடக்க வேண்டும் என்று நபியவர்கள் போதனை செய்தமை அவர்களின் மதம் கடந்த மனித நேயத்திற்குச் சான்றாக அமைந்துள்ளது.**

அப்துல்லாஹ் பின் அம்ரு (ரலி) என்ற நபித்தோழரின் வீட்டில் ஓர் ஆடு அறுக்கப்பட்டது. அவர் வீட்டுக்கு வந்தவுடன் "நமது அண்டை வீட்டில் உள்ள யூதருக்குக் கொடுத்தீர்களா? நமது அண்டை வீட்டில் உள்ள யூதருக்குக் கொடுத்தீர்களா?" என்று கேட்டார்கள். "அண்டை வீட்டாரை எனது வாரிசாக அறிவித்து விடுவாரோ என்று நான் எண்ணும் அளவுக்கு ஜிப்ரீல் எனும் வானவர் எனக்கு வலியுறுத்திக் கொண்டே இருந்தார் என்று முஹம்மத் நபி(ﷺ)அவர்கள் கூறியதாகவும் அப்போது தெரிவித்தார்."நூல் : திர்மிதி 1866

**முஹம்மத் நபி (ﷺ)அவர்களின் நெருங்கிய தோழர்களில் ஒருவர் அப்துல்லாஹ் பின் அம்ரு (ரழி). அவர், அவரது அண்டை வீட்டு யூதருக்கும் தனது வீட்டில் அறுக்கப்பட்ட ஆட்டிறைச்சியை வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறார். இதற்கு நபி (ﷺ)அவர்களின் போதனையே காரணம் எனவும் கூறுகிறார்.**

**அந்நிய மதத்து அண்டை வீட்டாருடனும் நல்லுறவைப் பேணுமாறு வலியுறுத்திய முஹம்மத் நபி(ﷺ)அவர்கள் மதத்தின் அடிப்படையில் யாருக்கும் பாரபட்சம் காட்டக் கூடாது என்ற பாடத்தை தனது தோழர்களக்கும் கற்றுக் கொடுத்தார்கள். அதை அவர்களும் கடைப்பிடித்துள்ளார்கள். இவ்வாறான நடைமுறைகள் இலங்கையில் முஸ்லிம்களால் ஓரளவு பேணப்படுகிறது. அந்த நடைமுறை சில பகுதிகளில் மாற்று மதத்தினரை ஈர்த்தும் உள்ளது. எனினும், எமது மார்க்கம் போதிக்கும் இன நல்லுறவிற்கான போதனைகள் போதுமான அளவு முஸ்லிம்களால் வெளிப்படுத்தப்படவில்லை என்ற விசனமும் தெரிவிக்கப்பட்டுவருகிறது.இதில் முஸ்லிம்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.**

**அந்நிய மதப் பணியாளர்** : **ஆட்சியும், அதிகாரமும் வந்த பின்பு நண்பர்களையும் உறவுகளையும் ஒதுக்கும் காலத்தில் நாம் வாழ்கின்றோம். ஆனால், முஹம்மத் நபி(ﷺ)அவர்கள் தம்மிடம் இவை அனைத்தும் வந்த பின்பும் சாதாரண முஸ்லிமல்லாத பணியாளர்களிடமும் எப்படி நடந்து கொண்டார்கள் என்பதை பின்வரும் நிகழ்வு எடுத்தக்காட்டுகிறது.**

**முஹம்மத் நபி(ﷺ)அவர்களிடம் யூத மதத்தைச் சேர்ந்த பணியாளர் ஒருவர் பணி செய்து வந்தாஉ. அவர் ஒரு நாள் நோய்வாய்ப்பட்டார். உடனே அவரை விசாரிக்க முஹம்மத் நபி(ﷺ)அவர்கள் அவரிடம் சென்றனர். அவரது தலைக்கருகில் முஹம்மத் நபி(ﷺ)அவர்கள் அமர்ந்தார்கள். "இஸ்லாத்தை நீ ஏற்றுக் கொள்ளலாமே" என்று அவரிடம் கூறினார்கள். அப்போது அந்த இளைஞரின் தந்தையும் அருகில் இருந்தார். அந்த இளைஞர் தமது**

தந்தையைப் பார்த்தார். “நபிகள் நாயகம் கூறுவதைக் கேள்“ என்று தந்தை கூறியதும் அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார். ‘‘இவரை நரகத்திலிருந்து காப்பாற்றிய அல்லாஹ்வுக்கே புகழனைத்தும்’’ என்று கூறிக் கொண்டே முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் வெளியேறினார்கள். நூல் : புகாரி 1356

முஹம்மத் நபி (ﷺ) அவர்களின் ஆட்சியில் சிறுபான்மையினராக வாழ்ந்த யூதர்கள் சிலர் அயல் நாட்டிலுள்ள முஸ்லிம்களின் எதிரிகளுக்கு தகவல்களைப் பரிமாறிக் கொண்டிருந்தனர். யூதனாக இருந்து கொண்டு, இரட்டை வேடம் போட்டு முஸ்லிம்களாக நடித்து ஏமாற்றியவர்களும் இருந்தனர். மதீனாவின் ஆட்சி முஸ்லிம்கள் வசமானதால் நாம் சிறுபான்மையினராகிவிட்டோம் என்று அவர்கள் மீது கடுமையான கோபமும் யூதர்களுக்கு இருந்தது.

எனினும், முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் அந்த யூத இனத்திலிருந்து ஒரவரை தனது பணியாளராகச் சேர்த்துக் கொண்டார்கள். இன்றைய சிலரின் நடவடிக்கைகளுக்காக முழு சமூகத்தையும் சந்தேகக் கண்ணுடன் பாரக்கும் முதிர்ச்சியற்ற தன்மை அவர்களிடம் காணப்படவில்லை. யூதர்களில் சிலர் எதிரிகளாக உள்ளதால் அச்சமுதாயத்தில் உள்ள நல்லவர்களைப் பகைத்துக் கொள்ளத் தேவையில்லை என்ற அளவுக்கு அவர்களிடம் மனித நேயம் மிகைத்திருந்தது என்பதை இன்றை ஆட்சியாளர்கள் அமர்ந்து படிக்க வேண்டி முன்மாதிரியாக உள்ளது.

இவ்வாறு பிற இன,மத மக்களிடம் முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் எந்த அளவு மனித நேயத்துடனும், மனிதாபிமானத்துடனும் நடந்திருக்கிறார்கள் என்பதை அறியும் போது வியப்பாக உள்ளது.

**கைதியான எதிரியுடன் கனிவான தன்மை :** உலகிலுள்ள எந்த ஆட்சியதிகாரியும், குற்றம் செய்து கைது செய்யப்படுபவர்களுடன அன்பாக நடந்து கொள்ள மாட்டார்கள். அதுவும் கிரிமினல் குற்றமிழைத்தவர் பிற இனத்தை, அல்லது சிறுபான்மை இனத்தைச் சேர்ந்தவராக இருந்தால், தண்டனை கடுமையாகும். இது இன்றுவரை உலகம் அவதானித்துக் கொண்டிருக்கும் நடைமுறை. ஆனால், முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் தனக்கும் தனது சமூகத்திற்கும் அக்கிரமம் புரிந்த கைதியுடன் எப்படிப் பரிவுடன் நடந்து கொண்டார்கள் என்பதை பின்வரும் வரலாற்று நிகழ்வு தெளிவுபடுத்தகிறது.

முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் நஜ்து எனும் பகுதிக்கு சிறு படையை அனுப்பினார்கள். அப்படையினர் பனூ ஹனீபா சமுதாயத்தைச் சேர்ந்த ஸுமாமா என்பவரைப் பிடித்து வந்தனர். அவரைப் பள்ளிவாசலின் ஒரு தூணில் கட்டி வைத்தனர். முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் அவரிடம் வந்து “ஸுமாமாவே! உம்மிடம் என்ன இருக்கிறது?“ என்று கேட்டனர். அதற்கவர் “முஹம்மதே! என்னிடம் செல்வம் இருக்கிறது. என்னை நீங்கள் கொன்றால் கொல்லப்படுவதற்குத் தகுதியானவனையே நீங்கள் கொன்றவராவீர்கள். நீங்கள் அருள் புரிந்தால் நன்றியுடன் நடப்பவனுக்கு அருள் புரிந்தவராவீர்கள்“ என்று கூறினார். அவரை அப்படியே விட்டு விட்டு முஹம்மத் நபி (ﷺ) சென்று விட்டனர். மறு நாள் அவரிடம் வந்து முதல் நாள் கேட்டது போல கேட்டனர். அவரும் முதல் நாள் கூறிய பதிலையே கூறினார். மூன்றாம் நாளும் அவரிடம் முஹம்மத் நபி (ﷺ) வந்தார்கள். முதல் நாள் கேட்டது போலவே அவரிடம் கேட்டரார்கள். அவரும் முதல் நாள் கூறிய பதிலையே கூறினார். அப்போது முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் “ஸுமாமாவை அவிழ்த்து விடுங்கள்” என்றார்கள். அவர் பள்ளிவாசலுக்கு அருகில் உள்ள பேரீச்சை மரத் தோப்புக்குள் சென்று குளித்து விட்டு பள்ளிவாசலுக்குள் நுழைந்தார். “வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர யாரும் இல்லை. முஹம்மத் அல்லாஹ்வின் தூதராவார் என்று நான் உறுதி கூறுகிறேன். முஹம்மதே! இவ்வுலகில் உங்கள் முகத்தை விட எனக்கு வெறுப்பான முகம் ஏதும் இருந்ததில்லை. இன்று உலகிலேயே எனக்கு மிகவும் பிடித்த முகமாக உங்கள் முகம் மாறி விட்டது. உங்கள் மார்க்கத்தை விட எனக்கு வெறுப்பான மார்க்கம் ஏதுமிருக்கவில்லை. இன்று உங்கள் மார்க்கம் உலகிலேயே எனக்குப் பிடித்த மார்க்கமாக ஆகி விட்டது. உங்கள் ஊரை விட எனக்கு வெறுப்பான ஊர் எதுவும் இருந்ததில்லை. இன்றோ உலகிலேயே எனக்குப் பிடித்த ஊராக உங்கள் ஊர் மாறி விட்டது. உங்கள் படையினர் என்னைப் பிடித்து வந்து விட்டனர். நான் மக்கா சென்று உம்ரா நிறைவேற்ற நினைக்கிறேன். நீங்கள் என்ன கூறுகிறீர்கள்“ என்று கேட்டார். அவருக்கு முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் வாழ்த்துக் கூறி, உம்ரா எனும் வணக்கத்தை நிறைவேற்றச் சொன்னார்கள்...”நூல்:புகாரி:4372

யமாமா எனும் பகுதியில் குறுநில மன்னனாக இருந்த ஸுமாமாவைத் தான் முஹம்மத் நபி (ﷺ) அவர்களின் படையினர் பிடித்து வந்தனர். “என்னை நீங்கள் கொல்வதென முடிவு செய்தால், அதற்கு நான் தகுதியானவனே” என்று அவர் கூறுவதிலிருந்து அவர் ஒரு கிரிமினல் குற்றவாளி என்பதும், கொல்லப்படுவதற்குத் தகுதியான பல கொடுமைகளை மதீனா இஸ்லாமிய அரசுக்கு எதிராக அவர் நிகழ்த்தியவர் என்பதும் தெளிவாகிறது.

இவ்வாறான, கொடுமைகள் செய்த தலைவர்களும், குறுநில மன்னர்களும் மன்னிக்கப்படுவது அன்றைய வழக்கத்தில் இருந்ததில்லை. ஆனால், கைதிக்கு நபி ﷺ அவர்களின் ஒட்டகத்திலிருந்து பால், மற்றும் உணவு வழங்கினார்கள். முஸ்லிம்களின் கொள்கை, கோட்பாடுகள், வணக்க வழிபாடுகள், அவர்களின் பண்பாடுகள் அனைத்தையும் அவர் காண வேண்டும்; அதன் மூலம் முஸ்லிம்கள் மீது அவர் கொண்டிருந்த கருத்தியல் தவறானது என்று அவர் புரிய வேண்டும் என்பதற்கு வாய்ப்பு வழங்கி, மூன்று நாட்கள் அவரை கைதியாக வைத்தார்கள்.

மூன்று நாட்களின் பின்னர் கிரிமினல் கைதியிடம் எந்த நிபந்தனையும் விதிக்காமல், எந்த ஒப்பந்தமும் செய்யாமல், எந்தப் பேச்சு வார்த்தையும் நடத்தாமல், பணமும் பெறாமல் குற்றவாளியை சாதாரணமாக விடுதலை செய்தார்கள்.

இஸ்லாத்தை கலப்படமற்றுப் பின்பற்றும் உண்மை முஸ்லிம்களின் தூய ஓரிறைக் கொள்கை, நேர்மை பண்பாட்டு நடவடிக்கைகள் என்பனவற்றை நேரில் காண்பவர் நிச்சயம் எதிரியாகமாட்டார். உடனே நண்பராகிவிடுவார் என்று நபி ﷺ அவர்கள் நம்பியதால் தான் அவிழ்த்து விட்டார்கள். அந்நிய மத கிரிமினல் குற்றவாளிகளிடம் கூட நபி ﷺ அவர்கள் எந்த அளவு கருணை உள்ளத்துடன் நடந்து கொண்டார்கள் என்பதை வரலாறு வியந்து நோக்குகிறது.

தன்னை வஞ்சித்த எதிரிகளிடம் கூட இத்தனை கனிவாக நடந்து கொண்டதால்தான் தனது பிரசாரத்தைவிட, நடைமுறைகளால் மக்களின் உள்ளங்களை முஹம்மத் நபி ﷺ அவர்கள் வென்றெடுத்து, இன்றுவரை மிகப்பெரும் சமுதாயம் அவர்களது கொள்கைகளை வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் பின்பற்ற வழி வகுத்தார்கள்.

**அந்நியரிடம் அடைமானம் வைத்த ஆட்சியாளர் :** முஹம்மத் நபி ﷺ அவர்கள் தமது இரும்புக் கவசத்தை ஒரு யூதரிடம் அடைமானம் வைத்து, அவரிடமிருந்து உணவுப் பொருளைக் கடனாக வாங்கினார்கள். நூல் : புகாரி 2096

சக்திவாய்ந்த மிகப் பெரும் ஆட்சியாளராக விளங்கிய முஹம்மத் நபி ﷺ அவர்களின் படாடோபமற்ற எளிமையான வாழ்வுக்குச் சான்றாக இதைக் குறிப்பிடலாம்.

நாட்டின் ஜனாதிபதி அடைமானம் வைக்கக் கூடியவராகவும்,அவரது ஆட்சியில் யூத – சிறுபான்மை சமுதாயத்தைச் சேர்ந்தவர் அடைமானம் பெற்றுக் கொண்டு, உணவுப் பொருளைக் கடனாக ஜனாதிபதிக்கு வாங்குபவராக இருந்தார் என்பதிலிருந்து,நபி ﷺ அவர்களின் விசாலமான உள்ளத்தை அறிந்து கொள்ள முடியும். அத்தோடு, சிறுபான்மை சமுதாயம் அவரது ஆட்சியில் செழிப்புடன் வாழ்ந்து, பொருளாதார வசதிபெற்று, தம்மை ஆள்பவருக்குக் கடன் கொடுக்கும் நிலையில் இருந்துள்ளனர். அவர்களது ஆட்சியில், சிறுபான்மை என்று பறிமுதல் இல்லை. நெருக்குதல் இல்லை. பொருளாதார ஸ்தளங்கள் அழிப்புக்கோ, தீக்கிரையாக்கப்படுதலோ இல்லை. ஆட்சியாளரைவிட ஆளப்பட்ட சிறுபான்மை இனம் செல்வச் செழிப்பில் வாழ்ந்துள்ளது வரலாற்றில் நபியவர்களது ஆட்சியில் மட்டும்தான் என்று வியப்புறும் நேர்மையான முன்மாதிரிமிக்க ஆட்சியை வழங்கியுள்ளார்கள். இஸ்லாமிய வரலாற்றை ஆழமாகக் கற்ற வில்லியம் மூர், “இஸ்லாத்தின் நிறுவனருடையதைக் காட்டிலும், அதிக ஆச்சரியம் தரக்கூடிய வாழ்க்கை முறை வரலாற்றிலே வேறெங்கும் இல்லை. அவரைப்போல் உலகத்தின் தலைவிதியில் ஆழ்ந்த விளைவுகளை ஏற்படுத்திய மனிதர்களைக் காணுதலும் அரிது” என்று வியக்கின்றார்.

**விஷம் வைத்த பெண்ணை மன்னித்தல் :** யூதப் பெண் ஒருத்தி முஹம்மத் நபி ﷺ அவர்களிடம் விஷம் கலந்த ஆட்டிறைச்சியைப் பொரித்துக் கொண்டு வந்தார். அதை முஹம்மத் நபி ﷺ சாப்பிட்டனர். உடனே அவள் பிடித்து வரப்பட்டாள். இவளை நாங்கள் கொன்று விடட்டுமா? என்று முஹம்மத் நபி ﷺ அவர்களிடம் கேட்கப்பட்டது. வேண்டாம் என்று அவர்கள் விடையளித்தார்கள். அந்த விஷத்தின் பாதிப்பை அவர்கள் உள்வாயின் மேற்பகுதியில் நான் பார்ப்பவனாக இருந்தேன் என்று அனஸ் (ரலி) கூறுகிறார். நூல் : புகாரி 2617

நபி ﷺ அவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிரிகளாகவும், சிறுபான்மையினராகவும் இருந்த யூத இனத்துப் பெண்மணி விஷம் கலந்த ஆட்டிறைச்சியைக் கொண்டு வந்து கொடுக்கிறாள். சிறுபான்மையினத்தைச் சேர்ந்த ஒரு சாதாரண பெண், நபி ﷺ அவர்களை சந்திக்கும் அளவு எளிமையாக இருக்கிறார்கள். அவளது உணவைப் பெற்றுக் கொள்ளும் அளவுக்கு அவர்களின் பெருந்தன்மை இருந்துள்ளது. அவள் வழங்கிய உணவில் விஷம் கலந்த செய்தி தெரிந்தவுடன் அவள் பிடித்து வரப்பட்டாள். அவளைக் கொன்று விடலாமா? என்று நபித் தோழர்கள் கேட்ட போது, வேண்டாம் எனக் கூறி மன்னித்துவிட்டார்கள். அத்தோடு, அப்பெண்ணுக்குப் பின்னணியில்

கொலைமுயற்சி செய்தவர் யார் என்பதையும் விசாரிக்கவில்லை. அவளது யூத சமுதாயத்தைப் பழிவாங்கவும் இல்லை.

மன்னராட்சியில் இது போன்று கொலை முயற்சி செய்தவர் மரண தண்டனை விதிக்கப்படுவார். அவர்கள் தூக்குத் தண்டனையிலிருந்து உயிர் பிழைப்பதே அரிது என்ற நிலையுடன் இதை ஒப்பிட்டுப் பார்த்தால், நபி (ﷺ) அவர்களின் பெருந்தன்மை எத்தகையது என்பது விளங்கும். கருத்தை விமர்சிக்கவும் கேள்வி கேட்கவும் உரிமை வழங்கப்பட்டுள்ள ஜனநாயக ஆட்சியில் கூட எத்தகைய விமர்சித்தவர்கள் பத்திரிகையாளர்கள் காணாமலாக்கப்பட்டுள்ளனர். அதிகம் பத்திரிகையாளர்கள் தண்டிக்கப்பட்ட நாடாக சீனா பதிவாகியுள்ளதாக அண்மையில் செய்திகள் வெளியாகின.

கருத்துச் சுதந்திரத்தை முழுமையாக வழங்கிய நபி (ﷺ) அவர்களின் செங்கோலாட்சியை காணும் எவரும், இந்த மாமனிதரின் பெருந்தன்மைக்கும் மனித நேயத்திற்கும் குற்றமிழைத்த சிறுபான்மை இனங்களுடனான அவரது நளினப் போக்கிற்கும் ஈடானது ஏதுமில்லை என்பதை ஒப்புக் கொள்வர்.இந்த வழிகாட்டல் அரசியல் செய்யும் அனைவருக்கும் மிகப் பெரிய முன்மாதிரியாக உள்ளது.

**பிற மதப் பிரேதத்திற்கு எழுந்து மரியாதை :** "எங்களைப் பிரேதம் ஒன்று கடந்து சென்றது. அதற்காக முஹம்மத் நபி (ﷺ) அவர்கள் எழுந்து நின்றார்கள். நாங்களும் நின்றோம். "அல்லாஹ்வின் தூதரே! இது யூதருடைய பிரேதம்" என்று நாங்கள் கூறினோம். அதற்கு முஹம்மத் நபி (ﷺ)அவர்கள் "நீங்கள் பிரேதத்தைக் கண்டால் எழுந்து நில்லுங்கள்" எனக் கூறினார்கள். நூல் : புகாரி :1311

ஒரு நாட்டின் ஜனாதிபதி மாளிகை உள்ள இடம் எவ்வளவு பாதுகாப்பானதாக இருக்கும். காவலர்கள் குவிக்கப்பட்டு, யாரும் நுழைய முடியாத காப்பரண்கள் வைக்கப்பட்டிருக்கும். ஆனால்,வலிமையான ஆட்சியாளராகத் திகழ்ந்த முஹம்மது நபி (ﷺ) அவர்கள் ஒற்றையறை ஓலைக் குடிசையில் மிக எளிமையாக வாழ்ந்துள்ளார்கள்.

சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த ஒருவரின் உடல் நபி (ﷺ)அவர்கள் அமர்ந்திருந்த பகுதியில் பயமோ, அச்சமோ இன்றி தைரியமாகக் கொண்டு செல்கிறார்கள் என்றால், இதைவிட சிறுபான்மைக்கு உரிமை வேறு என்னதான் வேண்டும் என்ற அளவு முழு உரிமை பெற்று வாழ்ந்துள்ளனர். எவ்வித அச்சமும், தயக்கமும் இன்றி வாழ்வதற்கான எல்லா உரிமைகளும் சிறுபான்மை சமூகத்திற்கு அண்ணலாரின் ஆட்சியில் வழங்கப்பட்டதால் தான், பிணத்தைத் தூக்கிக் கொண்டு, நபியவர்கள் அமர்ந்திருந்த இடத்தைக் கடந்து நடந்த செல்ல முடிந்துள்ளது. முஹம்மத் நபி (ﷺ) அவர்களின் ஆட்சியில் சிறுபான்மை மக்கள் எத்தகைய உரிமைகள் பெற்று சுதந்திரத்துடன் வாழ்ந்தனர் என்பதற்கும், நபி (ﷺ) அவர்களின் மதம் கடந்த மனித நேயத்துக்கும் இந்நிகழ்ச்சியும் சான்றாக அமைந்துள்ளது.

**கொல்ல வந்தவனை மன்னித்தல் :** பொதுவாக எதிரிகளுக்கு இலகுவில் யாரும் கருணை காட்டமாட்டார்கள். அதுவும் அசாதாரணமான நேரத்தில் கருணை காட்டவே மாட்டார்கள். ஆனால், முஹம்மத் நபி(ﷺ)அவர்கள், தமக்கு எதிராக வன்முறையைப் பிரயோகம் செய்து கொல்ல வந்தவர்களிடம், யுத்த களத்தில் கூட இரக்கம் காட்டியதற்குப் பல சான்றுகள் உள்ளன.

நான் முஹம்மத் நபி (ﷺ) அவர்களுடன் நஜ்து எனும் பகுதிக்குப் போர் செய்யப் புறப்பட்டேன். நபி (ﷺ)அவர்கள் திரும்பிய போது நானும் திரும்பினேன். முள் மரங்கள் நிறைந்த பள்ளத்தாக்கில் பகல் தூக்க நேரம் வந்தது. நபி (ﷺ) அவர்கள் வாகனத்திலிருந்து இறங்கினார்கள். மக்கள் மரங்களின் நிழல் தேடிப் பிரிந்து விட்டனர். நபி (ﷺ)அவர்கள் முள் மரத்தின் கீழ் தங்கினார்கள். தமது வாளை அம்மரத்தில் தொங்க விட்டனர். நாங்கள் சிறிது நேரம் தூங்கியிருப்போம், அப்போது, நபி (ﷺ) அவர்கள் எங்களை அழைத்தனர். அங்கே அவர்களின் அருகில் கிராமவாசி ஒருவர் இருந்தார். "நான் தூங்கிய போது இவர் எனது வாளை எடுத்து விட்டார். நான் உடனே விழித்து விட்டேன், இவர் வாளை உருவிக் கொண்டு என்னை விட்டு உம்மைக் காப்பாற்றுபவர் யார்?" எனக் கேட்டார். அல்லாஹ் என்று கூறினேன். அவர் உடனே வாளைக் கீழே போட்டு விட்டார்! என்று கூறினார்கள். அவரை நபி (ﷺ) அவர்கள் தண்டிக்கவில்லை என்று ஜாபிர் (ரலி) அறிவிக்கின்றார்கள். நூல் : புகாரி 2913

தன்னைக் கொல்ல வந்த சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த எதிரியைக் கூட முஹம்மத் நபி (ﷺ)அவர்கள் தண்டிக்காது, மன்னித்து விடும் அளவுக்கு அவர்களின் பெருந்தன்மை அமைந்திருந்தது.

**போர் நெறி :** வரலாற்றுக் காலம் தொட்டு போர் என்று வந்துவிட்டால், மனிதர்கள் மிருகங்களாகவே மாறிவிடுவதை இன்றுவரை உலகில் அனைவராலும் காணமுடியுமாக இருக்கிறது. அப்பாவிகளும், பெண்களும்,

சிறுவர்களும் போரில் எவ்விதத்திலும் பங்கு வகிக்காதவர்களும் கொல்லப்படுவதை இன்று நடைபெறும் சிரியா, பலஸ்தீன் போன்ற யுத்தங்களில் கூட தெலைக்காட்சி வழியாகக் காண்கிறோம். பெண்களும் சிறுவர்களும் கொத்துக் கொத்தாகக் கொல்லப்படுகின்றார்கள். இதெல்லாம் போர்க்களத்தில் தவிர்க்க முடியாது என்று திமிருடன் நியாயப்படுத்தும் அதிகாரவர்க்கத்தையும் காண்கின்றோம். ஆனால், நபி (ﷺ) அவர்கள் பங்கு கொண்ட ஒரு போர்க்களத்தில் ஒரு பெண் கொல்லப்பட்டுக் கிடந்ததை நபி (ﷺ) அவர்கள் கண்டார்கள். அதனால், பெண்களையும், சிறுவர்களையும் கொல்லக் கூடாது என்று கடுமையாக எச்சரித்தனர். நூல் : புகாரி 3014 இன்றைய பொருளாதாரச் சுரண்டலுக்கான யுத்த களத்தில் எதைத் தவிர்க்க முடியாது என்று அதிகார வர்க்கப் போர் வெறியர்கள் கூறுகிறார்களோ, அதைத் தவிர்த்தே ஆக வேண்டும் என்று நியாயத்திற்கான தனது யுத்த களத்தில் தமது படையினருக்கு நபி (ﷺ) அவர்கள் கண்டிப்பான கட்டளை பிறப்பித்தார்கள். அத்தோடு, நடைமுறைப்படுத்தியும் காண்பிக்கிறார்கள்.

இந்த நிகழ்ச்சியில் கொல்லப்பட்ட பெண், போர்க் களத்திற்கு வராமல் வீட்டில் அமர்ந்திருந்தவள் இல்லை. மாறாக அவள் சார்ந்த மதப் படையினருக்கு உதவிகள் செய்வதற்காகவே களத்திற்கு வந்தவள், காயமடைந்தவர்களுக்கு உதவவும், உணவு போன்ற தேவைகளை நிறைவேற்றவும் பெண்கள் களத்திற்கு வருவது அன்றைய வழக்கம். இத்தகைய பெண்களும் கூட கொல்லப்படலாகாது என்று நபி(ﷺ)அவர்கள் கட்டளையிட்டு, போர்க்களத்திலும் புது நெறியை நிலை நாட்டினார்கள்.

**பள்ளிவாசலில் சிறுநீர் கழித்தவரை மன்னித்தல் :** முஸ்லிம்களைப் பொறுத்தவரை பள்ளிவாசல் புனிதமான இடம். அதுவும் மதீனாப் பள்ளி மிகவும் சிறப்பு வாய்ந்ததில் இரண்டாம் இடத்தில் உள்ளது. அது மாமனிதரின் சொந்தப் பணத்தில் அமைக்கப்பட்டது. அது, அவர்கள் தமது திருக்கரத்தால் தமது சொந்தப் பொருளாதாரத்தில் கட்டிய பள்ளிவாசலாகும்.

பொதுவாக மனிதர்கள் புனிதமாக மதிப்பவை அசிங்கப்படுத்தும் போதுதான் அதிகமான கோபம் கொள்வது வழக்கம். ஆனால், புனித இடத்தை அசிங்கப்படுத்தியவருடன் நபியவர்கள் நடந்துகொண்ட அந்த நிகழ்ச்சியைப் பாருங்கள்!

“ஒரு கிராமவாசி வந்து பள்ளிவாசலில் சிறுநீர் கழிக்கலானார். மக்கள் அவரை விரட்டலானார்கள். அப்போது, நபி (ﷺ)அவர்கள் அவரை விட்டு விடுங்கள்! அவர் சிறுநீர் கழித்த இடத்தில் ஒரு வாளித் தண்ணீரை ஊற்றுங்கள்! மென்மையாக நடந்து கொள்ளுமாறு தான் நீங்கள் கட்டளையிடப்பட்டுள்ளீர்கள்! கடுமையாக நடந்து கொள்ளுமாறு கட்டளையிடப்படவில்லை என்றார்கள்."நூல் : புகாரி:6128

“…அவர் சிறுநீர் கழிக்கும் வரை அவரை விட்டு விடுங்கள் என்றார்கள். அவர் சிறுநீர் கழித்து முடிந்ததும் அவரை அழைத்தார்கள். “இது அல்லாஹ்வின் ஆலயம். இதில் சிறுநீர் கழிப்பதோ, மற்ற அருவருப்பான செயல்களைச் செய்வதோ தகாது. தொழுகை நடத்துவதற்கும் இறைவனை நினைவு கூர்வதற்கும் உரியது என்று அறிவுரை கூறினார்கள். நூல் : முஸ்லிம்: 429

சிறுநீர் கழிப்பவர், அதை அடக்கிக் கொள்வதற்காகச் சிரமப்படக் கூடாது. அதனால், வேறு விளைவுகள் அவருக்கு ஏற்படலாம் என்பதற்காக அவர் முழுமையாக சிறுநீர் கழிக்கும் வரை பொறுத்திருந்து, அவரை அழைத்து, அறிவுரை கூறுகிறார்கள். குறைந்த பட்சம் இப்புனித இடத்தில் இவ்வளவு அசிங்கமாக நடந்திட்டாயே என்று கடுமையான வார்த்தைகளால் அவரை ஏசியிருக்கலாம். அல்லது அவரையே சுத்தம் செய்து தருமாறு கட்டளையிட்டிருக்கலாம். பண்பாடு தெரியாத ஒரு கிராமவாசி, அறியாமையின் காரணமாக அசிங்கம் பண்ணிவிட்டார் என்று மென்மையாக அறிவுறுத்துகிறார்கள்.

எந்தச் சந்தர்ப்பத்திலும் அதிகாரபலப் பிரயோகம் செய்து, அடக்கி ஆழ்பவராக அவர்கள் இருக்கவில்லை. எல்லா சந்தர்ப்பத்திலும் அறிவு வழியில், நிதானம் தவறாதவர்களாக செயற்பட்டார்கள் என்பதற்கு வரலாற்றில் ஏராளமான சான்றுகள் உள்ளன.

நிர்மாணத் திறன் மிக்க சிந்தனையாளர்கள், சமூக சீர்திருத்தவாதிகள், நல்லாட்சித் நல்கிய தலைவர்கள், பயனுள்ள பல கண்டுபிடிப்புகளை உலகுக்கு வழங்கியவர்கள், மாபெரும் மக்கள் புரட்சியை ஏற்படுத்தியவர்கள், வெற்றிவாகை சூடிய மாவீரர்கள், வாரி வழங்கிய கொடை வள்ளல்கள், துறை சார் பண்டிதர்கள் மற்றும் மதங்களைத் தோற்றுவித்தோர் என பல்லாயிரக்கணக்கான சாதனையாளர்கள் உலகில் தோன்றி மறைந்துள்ளனர். இத்தகைய சாதனையாளர்களிலிருந்து முக்கியமான இடத்தைப் பிடித்த நூறு சாதனையாளர்களைத் தேர்வு செய்த (Micheal H. Harte) எனும் வரலாற்று ஆய்வாளர், “ஒற்றுமையற்று, ஒழுக்கம் குலைந்து, இறைத்தன்மை உணராமல், தறிகெட்டு வாழும் அரபுக்களின் வாழ்க்கை நிலையை மாற்றி உயர்த்த

இறைவனால் நியமிக்கப்பட்ட ஓர் ஊழியராகவே அவர் தம்மை உணர்ந்தார். துளி அகங்காரம் கிடையாது. பெருமையோ,வானவர் வந்து ''இறைத்தூதர்'' என்று அறிவித்துப்போன பெருமிதமோ, கர்வமோ கிடையாது. ஊழியன். வெறும் ஊழியன். இப்படித்தான் முஹம்மது அவர்கள் தம்மை இறுதிவரை கருதினார்கள்" என்று குறிப்பிடுகின்றார். வரலாற்று நாயகர்கள் குறித்து நடுநிலையோடும், காய்தல் உவத்தலின்றியும் யார் ஆய்வு செய்தாலும், எந்தக் கோணத்தில் ஆய்வு செய்தாலும் அவரால், செங்கோல் ஆட்சியூடாக கர்வமற்ற எளிமையான வாழ்க்கை மூலம் மனித நேயத்தைப் போதித்து ,சமூக நல்லிணக்கத்தை போஷித்து, சமூக நிர்மாணத்தை மேற்கொண்ட நபி﴾ﷺ﴿அவர்களுக்குத்தான் முதலிடத்தைத் வழங்க முடியும் என்பது வரலாறு நெடுகிலும் நிரூபணமாகியுள்ளது.

நபி ﴾ﷺ﴿ தனது ஆரம்ப நாட்களிலும் அதிகார பலம் வந்த நாட்களிலும் அனைத்து மக்களுடன் மிகவும் பணிவாகவும் அன்பாகவும் நடந்து கொண்டார்கள். அவர்களது வாழ்வில் உலக மக்கள் அனைவருக்கும் முன்மாதிரி உள்ளது. அந்த முன்மாதிரிகளின் பக்கம் கவனம் திரும்பினால், உலகில் அமைதியும் சமாதானமும் சகவாழ்வும் நிலவும் என்று அறுதியிட்டு உறுதியாகக் கூறமுடியும்.

## உசாத்துணைகள்


### அரபி நூல்கள்

1. الشيخ صفي الرحمن المباركفوري (1428 هـ ) الرحيق المختوم بحث في السيرة النبوية - وزارة الأوقاف والشؤون الإسلامية - قطر
2. عبد الرحمن رأفت الباشا (1421 هـ ) صور من حياة الصحابة - مؤسسة الرسالة - بيروت
3. أ.د/ شوكت محمد عليان ( 1424 هـ) - حقوق غير المسلمين في المجتمع الإسلامي فهرسة مكتبة الملك فهد الوطنية - الرياض
4. محمد سليمان سلمان المنصورفوري( 1418 هـ) رحمة للعالمين دار السلام للنشر والتوزيع - الرياض

### ஆங்கில நூல்கள்

1. Michael H. Hart (1993) The 100 most influential persons in history. Carol Publishing Group. Canada.
2. Prophet Muhammad The Greatest Man (2008) Sun Printing Agency,Chennai.
3. AbdurRahmanAl –Sheha(2005) Mohammad The Messange of Allah-The Islamic propagation Office at Rabwa,Riyadh.

### தமிழ் நூல்கள்

1. அ.மார்க்ஸ் (2004) நான் புரிந்து கொண்ட நபிகள் – கருப்புப் பிரதிகள்,சென்னை.
2. எம்.ஏ. ஹபீழ் (1999) தியாகப் பயணம் – முனீராப் பதிப்பகம், சென்னை.
3. மு.மேத்தா (1998) நபிகள் நாயகம் ஒரு காவியம் – திருமகள் நிலையம், சென்னை.
4. நபிகள் நாயகம் வரலாறு (2015) சன் பிரிண்டிங் ஏஜென்சி, சென்னை.
5. எம்.ஏ. ஹபீழ் (1999) நிறைவு பெற்ற இறைத் தூது – முனீராப் பதிப்பகம், சென்னை.
6. எம்.எஸ்.எம்.அனஸ் (1997) இஸ்லாத்தின் தோற்றம் – பண்பாட்டு ஆய்வு வட்டம்,பேராதனை.
7. அல் – ஜாமிஆ (1992) ஜாமிஆ நளீமிய்யா இஸ்லாமிய்யா,பேருவளை.
8. இஸ்லாத்தைத் தெரிந்த கொள்ளுங்கள் – நஸீம் ஜாலியாத், ரியாத்.
9. டாக்டர் பஸ்லுர் ரஹ்மான் ஃபரீதி (2016) பன்மைச் சமூகத்தில் முஸ்லிம்கள்–இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட், சென்னை.
10. ஏம்பல் தஜம்முல் முகம்மது எம்.ஏ.(2016) திருக்குர்ஆனில் பிற சமயம் குறித்த மதிப்பீடுகள் – நியூலைட் புக் சென்டர், சென்னை.